தாள்கள் களவு போய்விட்டதாக கூறப்பட்டது. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மீது தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு. கே. விநாயகம் : இதுமாதிரி, நேரத்தில் நடக்கக்கூடிய தேர்வு நடக்காமல் போனது மற்ற எந்த ஆட்சியிலும், எப்போதும் நடக்கவில்லை. இப்போதிருக்கும் கட்சி, ஆட்சி செய்கின்ற நேரத்தில்தான் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான காரியங்கள், சென்ற அரசின் தொடர்ந்த காரியங்களாகத்தான் கருதப்பட வேண்டும். 9—4—1967-ல் தேர்வு நடத்தவும், அதற்கான வினாத்தாள்களை அனுப்புவதற்காக கண்ட்ராக்டர்களை நியமித்ததும் சென்ற அரசின் நடவடிக்கைகளாகும். 9—4—1967-ல் தேர்வு என்றால், சுமார் ஆறு மாத காலத்திற்கு முன்னால் காண்ட்ராக்ட் விடப்பட்டிருக்கும். ஆகவே, சென்ற அரசினுடைய கெடுதல்கள் இந்த அரசைத் தாக்குகின்றன என்று சொல்லலாம். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமலிருக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. விநாயகம்: வினாத்தாள்கள் திருடு போனது இப்போதிருக்கும் ஆட்சியில் மட்டும்தான் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருடு போய்விட்டது என்று தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து தகவல் வந்தது. ஆனால், சென்ற இருபது ஆண்டுகளில் என்ன என்ன வகைகளில், என்னென்ன திருடு போயின என்பதை வேண்டுமானால் பட்டியல் போட்டுத் தருகிறேன். ஆகவே, இப்போதிருக்கும் அரசாங்கத்தினுடைய நிலைக்கும், வினாத்தாள் களவு போனதற்கும் தொடர்பு இல்லையென்று கருதுகிறேன்.

Government Training College, Katpadi

* 241 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to admit lady candidates also in the Government Training College at Katpadi for the B.T. and Vidwan Training (Tamil) Courses?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Whereas it has been found that training colleges for women are very scarce in our State and whereas a dire necessity has been felt in the North Arcot District, will the Minister reconsider the decision and issue fresh orders conceding my proposal?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களையும் சேர்த்துக்கொள்வதுபற்றி பல்கலைக் கழகம்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு என்று தனியாக சென்னையில் நான்கு கல்லூரிகளும் மற்ற இடங்களில் மூன்றும் இருக்கின்றன. இவர்களுக்குத் தனியாக சில வசதிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது— Retiring room for women students, separate hostel and playground, appointment of a few women teachers on the staff of the college concerned and provision of a direct teaching in high schools, etc. அந்த அடிப்படையில் ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கான வகுப்புக்களைத் துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை.

கான்சாகிப் வாய்க்கால்மீது பாலம்

* 242 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகாவில், சிதம்பரம்-கிள்ளை சாலையில் நவரப்பேட்டை என்ற இடத்தில் கான் சாகிப் வாய்க்கால் மீது கட்டப்பட்டிருக்கும் மதகு பஸ் போக்குவரத்துக்கு ரொம்பவும் இடைஞ்சலாக இருப்பதால் அதை இடித்துவிட்டு பெரிய மதகாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்விதமான செயற்குறிப்பு எதுவும் ஆய்வில் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்த மதகானது வண்டிகள், பஸ்கள் போவதற்கு மிகவும் வசதிக் குறைவாக இருப்பதனால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. சென்ற காலத்திலேயே இதுபற்றி ஆட்சியாளரிடத்தில் சொல்லப்பட்டது. உடனடியாக இந்த அரசானது அந்த மதகை எடுத்துவிட்டுப் பெரியதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி மாவட்ட வளர்ச்சி கௌன்சிலில் இருந்து பரிந்துரை எதுவும் இந்த அரசுக்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்திற்கு வெள்ள நிவாரணம்

* 243 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு பெரும் மழையால் ஆறுகள் உடைப்பால் வெள்ளம் ஏற்பட்டதா ?